1971 ஜூலை 28]

திரு. ஏ. சி. நரசிம்மன் : இந்த நிதிக்குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள உத்தரவிடப்படுமா ? ஏற்கனவே ஆசிரியர்களை மாற்றுவதில் பஞ்சாயத்துக்கள் அட்ஹாக் கமிட்டிகளில் சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். அதேபோல் இந்தக் குழுக்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டால் அவர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்க சௌகரியமாக இருக்கும். ஆகவே அரசு இதைப் பரிசிலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இவை, நகராட்சிகளின் நிர்வாகத்தைப் பற்றிக் கவனிப்பதற்காக அமைக்கப்படுகின்ற குழுக்கள். ஆகவே நகரசபை உறுப்பினர்தான் அதில் இடம் பெற்றிருக்க முடியும். ஆகவே நகராட்சித் தலைவர், ஆணையர், நகராட்சி உறுப்பினர்களாக இருப்பவர்களில் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒருவர் இருக்கவேண்டுமென்ற நியதி இருக்கிறது. வெளியே இருப்பவர்கள் அதிலே உறுப்பினராக இருக்க இயலாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்படிப்பட்ட நிதிக்குழுக்களை எல்லா நகராட்சிகளும் அமைக்கவேண்டுமென்று குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறதா ? இதுவரையில் எத்தனை நகராட்சிகள் அப்படிப்பட்ட குழுக்களை அமைத்திருக்கிறார்கள் ? அப்படி அமைப்பதற்கு ஏதாவது காலக்கெடு நிச்சயிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அமைக்கவேண்டுமென்றுதான் 17—12—1970-ல் அரசு ஆணை பிறப்பித்து நகரமன்றங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. காலக்கெடு குறிப்பிடவில்லை. எவ்வளவு நகரமன்றங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் தயாரித்துத் தரலாம்.

அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கதிர்வீச்சுப்பிரிவு

* 506 **வினா—திரு. என். எஸ். பலராமன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் அரசாங்க மருத்துவமனையில் எக்ஸ்-ரே யூனிட் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) அரக்கோணம் அரசாங்க மருத்துவமனையில் எக்ஸ்-ரே யூனிட் அமைப்பதற்கான ஒப்புதல் உடனடி வழங்கப்பட்டிருக்கிறது. விரைவில் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி, அரக்கோணம்பற்றியது.

திரு. நா. வீராசாமி : எக்ஸ்-ரே யூனிட் அமைப்பதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. எக்ஸ்-ரே யூனிட்டும் வந்திருக்கிறது. ஆனால் அதைப் பொருத்துவதற்கு அங்கு கட்டடம் இல்லை. பழைய கட்டடத்தில் அதைப் பொருத்தினால் நிச்சயம் அந்த இயந்திரம் பாழாகிவிடும். எனவே ஒரு புதிய கட்டடத்தை அங்கே அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் துறை அவ்வளவு பழைய துறை அல்ல. ஆகவே பழைய கட்டடத்தில் பொருத்துவதற்கு எண்ணம் இல்லை. ரூ. 37,000 கட்டடம் கட்ட, ரூ. 50,000 யூனிட் அமைக்க, ரூ. 8,500 பிற கருவிகளுக்கு என்ற ஏற்பாடு இருக்கிறது.

1971 ஜூலை 28]

திரு. க. உரொ. எட்மண்ட் : சில மருத்துவ மனைகளில் இப்பேர்ப்பட்ட ஊடுருவிக் கதிர் இயந்திரங்களை அமைக்க பலவிதமான இடர்பாடுகள் உள்ளன. அவற்றை அமைத்த பிறகு ஏற்படும் ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர், பராமரிப்பதற்கான செலவு, அதற்கான அலுவலர்களைப் போடுவதற்கு ஏற்படும் செலவு இவைகள காரணமாக போடமறுக்கிருர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். கேள்வி அரக்கோணம் பற்றியது. கேள்வி எக்ஸ்-ரே யூனிட் பற்றியது. எக்ஸ்-ரே யூனிட் என்ன, ஏது என்ற விளக்கங்கள் எல்லாம் இங்கே தேவையில்லை.

THIRU G. R. EDMUND : It is a general question . . .

முற்பகல் 9-30 MR. DEPUTY SPEAKER : There is no room for general question now. The main question relates to the Hospital at Arkonam.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, பொதுமக்களாகவே முன் வந்து எக்ஸ்-ரே பிளாண்ட் வைக்க முன்வரும்போது, அவற்றை வாங்கி மருத்துவ மனைகளில் வைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி கேட்ட உறுப்பினர் அப்படி ஒரு 10 எக்ஸ்-ரே பிளாண்ட்க்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற எக்ஸ்-ரே பிளாண்ட்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறது? ஹாஸ்பிடலில் இருக்கும் படுக்கை எண்ணிக்கைகளைப் பொறுத்தா அல்லது அந்தப் பகுதியிலுள்ள டாக்டர்களின் ரிக்வஸ்ட்டைப் பொறுத்து அமைக்கப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பெரும்பாலான மருத்துவ மனைகளில் 25 படுக்கைக்குக் குறையாமல் இருந்தால் இந்த வசதி செய்து கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதை விரிவுபடுத்துவதற்கான முயற்சி எடுக்கிறபோது அந்த எண்ணிக்கையைக் குறைக்க அரசு முன்வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுக்கேள்வி குறித்து நல்ல விளக்கம் கொடுத்திருக்கிருர்கள். ஆகவே, அரக்கோணத்தைப்பற்றி துணைக் கேள்விகள் கேட்கவும்.

திரு. கே. எ. வகாப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரக்கோணம் எக்ஸ்-ரே மருத்துவ மனையில் ஏதேனும் பணம் வசூல் செய்யப்படுமா? பணம் கொடுத்தால் எக்ஸ்-ரே நிலையம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். காயல்பட்டினத்தில் பணம் கொடுத்துள்ளதாக அறிகிறேன். அங்கே ஒரு எக்ஸ்-ரே நிலையம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்காகத் தனிக் கேள்வி போட வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வட்ட தலைமை மருத்துவ மனையில் இந்த ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னேன். காயல்பட்டினத்தில் உள்ளது வட்ட தலைமை மருத்துவ மனைதானு என்பது தெரியவில்லை.

1971 சூலை 28]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : உப தலைவரவர்களே, இந்த எக்ஸ்-ரே யூனிட் அரக்கோணம் மருத்துவ மனையில் அமைப்பது கேட்டு மிக்க மகிழ்ச்சி. அந்த எக்ஸ்-ரே யூனிட்டுக்குத் தக்கவாறு பிலிம்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சராக இருந்தவர்கள் அதை நிச்சயமாக உணர்ந்து இருப்பார்கள்.

When there is non-recurring expenditure, recurring expenditure is also taken into consideration.

வட்டத்துக்கு ஒரு வலம்வம் மருந்தகம்

* 507 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாலுக்காவுக்கு ஒன்று விதம் நடமாடும் மருந்தகம் ஒன்று அமைத்து செயல்பட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த நடமாடும் மருத்துவ மனைக்கு வேண்டிய ஊர்தியும், மருந்தும் அந்தந்த வட்டாரப் பொதுமக்களின் நன்கொடையைப் பெற்று அரசாங்கத்திற்கு அளித்தால், அரசாங்கம் அதை ஏற்று நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நடமாடும் மருத்துவமனை என்று சொல்கிறபோது மிக எளிதாகவும், அதன் பயனைக் கருதுகிறபோது மிக மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. என்றாலும் அதை நடத்திச் செல்வதற்கு, நடமாட முடியாத சக்தியை நடமாடச் செய்வதுபோல், பெரும் செலவு ஆகிறது. இன்று அந்த நடமாடும் மருந்தகங்கள் மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்டு, மருத்துவ மனைகளிலே மட்டும் 2 இடங்களில் மத்திய அரசின் உதவியோடு செயல்படுகிறது. தமிழக அரசு நடமாடும் மருத்துவ மனையை ஆரம்பிப்பதைவிட, மருத்துவ மனைகளைச் சுற்றுப்புறச் சூழ்நிலையில் 25-40 மைல் சுற்றளவில் எங்கும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. மலைப் பகுதியில், காட்டுப்பகுதியில், இப்போது இந்த நடமாடும் மருந்தகங்கள் இருக்கின்றன. இப்போது இருக்கும் இடங்கள் : ஆலங்காயம், வடஆற்காடு மாவட்டம்; கூடலூர், நீலகிரி மாவட்டம்; உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்; செய்யூர், செங்கற்பட்டு மாவட்டம்; அரூர், தருமபுரி மாவட்டம்; ஜெயம் கொண்டான், திருச்சி மாவட்டம்; சங்கரன்கோவில், திருநெல்வேலி மாவட்டம்; இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்; கொடைக்கானல், மதுரை மாவட்டம் என்று இப்படியாக மலைசூழ்ந்த பகுதியாக இருந்து, மக்களுக்கு வேறு மருத்துவ வசதி இல்லாத இடங்களில் நடமாடும் மருத்துவ மனைகள் அமைக்கிறோம். இன்னின்ன நாட்களில் அந்த நடமாடும் மருந்தகங்கள் அந்தந்த ஊர்களுக்குச் செல்லவேண்டுமென்று இருக்கிறது. இதை விரிவு படுத்தி தமிழகத்தின் கிராமப்புறத்தில் அமைக்கவேண்டிய மிகப்பெரிய அவசியம் இருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் பதில் மிக விளக்கமாக இருக்கிறது. மேலும் என்ன கேள்வி கேட்கப்போகிறீர்கள் ?